[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2014 ஜனவரி 31

அன்புப் பிள்ளைகளே நம் கழகம், நித்தம் நித்தம் இறைவனிடம் நாங்கள் இறைஞ்சுவது என்னவென்றால், எந்நாளும் சேர்த்தெடுத்து எம் தாய்க்குத் தந்திடுங்கள், எங்கள் நாளே அத்தனை நாளையும் சேர்த்தெடுத்து எங்கள் தாய்க்குத் தந்திடுங்கள். மூன்றாம் பிறையாய்த் தோன்றும் எங்கள் தாய், ஆயிரம் பிறை கடந்தும் வாழவேண்டும். அதுவே எம்பேறு என்றோம். முறையறிந்து அவாவை நீக்கி முனிவழி முனிந்து வெஃகும் இறையறிந்து உயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன் காக்கப் பொறை தவிர்த்து உயிர்க்கும் தெய்வப் பூதலந்த தன்னின்-பொன்னியின் நிறை பரம் சொரிந்து-வங்க நெடுமுதுகு ஆற்றும் மன்னன் என்ற கம்பனின் செங்கோல் மன்னன் ஆட்சிப் பெருமை பேசும் வரிகள்போல எங்களைக் காக்கப் பிறந்தார் எம் அம்மா. அவர்களைத் தாங்கத் தவித்தோம் நாங்கள் அம்மா. 1½ கோடி தமிழகத்தின் தங்கம் எங்கள் அம்மா. தொண்டர் தம்மைத் தாங்கும் இதயம் எங்கள் அம்மா. 7½ கோடி தமிழர்களின் சிங்கம் எங்கள் அம்மா. தமிழகமே அவருடைய அங்கமாகும் எங்கள் அம்மா. 100 கோடி இந்தியரும் ஏங்கி விரும்பும் தலைமை எங்கள் அம்மா. இந்தியாவையே வழிநடத்த இருக்கும் தலைவி எங்கள் அம்மா எனக் கூறி என்னைப் போன்ற எளிய கடைக்கோடித் தொண்டனை கரைசேர்த்த தேனனைய தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களிலே பலகோடி நன்றி மலர்களைக் குவிக்கின்றேன். வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றிகளைக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

5. அரசினர் தீர்மானம்

உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“இன்றையதினம் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து நடந்துகொண்ட

2014 ஜனவரி 31] [**திரு. ஓ. பன்னீர்செல்வம்**]

விதத்தை இங்கு அமர்ந்துள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் நன்கு அறிவார்கள். அவை மரபுகளுக்கு மாறாக, அவை விதிகளை துச்சமாக மதித்து, பேரவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களின் நடவடிக்கை தரம் தாழ்ந்து இருந்தது. ஓர் ஆளும் கட்சி உறுப்பினர் சட்டமன்றத்தில் தெரிவித்த கருத்திற்கு எதிர் கருத்துச் சொல்ல இயலாத காரணத்தால் அக்கருத்தினை நியாயப்படுத்த விளக்கம் அளிக்க அவரால் இயலாத காரணத்தால், ஆத்திரத்தில், பேரவைத் தலைவரை மிரட்டும் வகையில், பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே வந்து தான்தோன்றித்தனமாக, பேரவையின் மதிப்பினையும், இறையாண்மையையும், மாண்பினையும் காக்கும் பொறுப்புள்ள சட்டமன்றப் பேரவைத் தலைவரின் எதிரில், ஆளுநர் உரை பிரதிகளைக் கிழித்தெறிந்திருப்பது, அவையில் இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கண்ணியத்தையும், ஒழுக்கத்தையும், உரிமைகளையும் இழிவுபடுத்தும் வகையில் செய்யப்பட்ட ஒரு செயலாகும். இதுபோன்ற செயல்கள் தடுக்கப்படாவிட்டால் ஜனநாயகத்தின் முக்கியத் தூணாக விளங்கும் சட்டமன்றத்தின் தரம் பொதுமக்கள் மத்தியில் தாழ்ந்துவிடும். இதுபோன்ற செயல்கள் தடுக்கப்படவேண்டியதும், தண்டிக்கப்படவேண்டியதுமாகும். எனவே, பேரவை அலுவல்களை நடைபெறவிடாமல் இடைமறித்து, பேரவை விதிகளுக்கு மாறாக, அவைக்கு இழுக்கு விளைவிக்கும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது உரிமையை தவறாகப் பயன்படுத்தி, இன்று பேரவையில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில், அவை விதிகளுக்கு மாறாக நடந்துகொண்ட உறுப்பினர் திரு. எஸ்.எஸ், சிவசங்கர் அவர்கள், சட்டமன்றப் பேரவை விதி 121, உள்விதி(2)-ன்கீழ், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்படவேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுகிறார்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பங்கெடுக்க அனுமதித்ததற்காக முதலில் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நேற்றையதினம் ஆளுநர் அவர்களால் முன்வைக்கப்பட்ட அறிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முழு மனதோடு நாங்கள் வரவேற்கிறோம். அந்த அறிக்கையைப்பற்றி சில அரசியல் கட்சிகள் கருத்துகளைக் கூறுகிற நேரத்தில் புதிய திட்டங்கள் எதுவும் இல்லை, பழைய திட்டங்களையே அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள் என்று சில கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு புதிய புதிய திட்டங்களை ஆண்டுதோறும் செயல்படுத்துவது ஓர் அரசினுடைய நிலையான கொள்கையாக இருக்க முடியாது. அதற்குப் பதிலாக அறிவித்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதுதான் ஒரு நல்ல அரசினுடைய லட்சணமாக இருக்கும் என்ற அடிப்படையில் கடந்த காலத்தில் அறிவித்த திட்டங்களை இன்றைக்கு சிறப்பாக இந்த அரசு நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறது என்பதற்கு முத்திரையாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அதைப்போல அந்த அறிக்கையிலே நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குத் திட்டமான 2023